**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**

**O.S.No. 102 Of 2016**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | DW2 |
| **Name of the Witness** | : | விசாலாட்சி (எ) கலைவாணி |
| **Father's Name** | : | |
| **Age** | : | |
| **Occupation** | : | |
| **Address** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 11th day of March, 2026.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :-

நான் அண்ணாமலை படையாட்சியின் மகன் குமரன் வழி பேத்தி. 2010 அண்ணாமலை படையாட்சி எழுதிய உயிலின் அடிப்படையில் நாங்கள் அனைவரும் சொத்து பிரித்து அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். எனது தம்பி 6 வது பிரதிவாதி ராஜதுரைக்கு உயிலில் 4 ஏக்கர் கொடுக்கப்பட்டு அது முன்னிலைக்கு அவர் பட்டா மாற்றிக்கொண்டார் என்றால் சரிதான். உயில் முன்னிலைக்கு வாதிகளும், 2வது பிரதிவாதி காமராஜ் சொத்துக்களை எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அண்ணாமலை படையாட்சி எழுதி வாங்கிக்கொண்ட புரோநோட்டுக்களுக்கான தொகையை அவர் உயிருடன் இருந்த சமயத்திலேயே வாங்கிக்கொண்டார் என்றால் சரியல்ல. 2வது பிரதிவாதி காமராஜிடம் அண்ணாமலை படையாட்சி புரோநோட்டுக்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2வது பிரதிவாதி காமராஜ் அந்த புரோநோட்டுக்கள்

முன்னிலைக்கு யாரிடமும் பணம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. அண்ணாமலை படையாட்சி காலத்திற்கு பிறகு 2வது பிரதிவாதி காமராஜ் மற்றும் எனது சகோதரர் 6 வது பிரதிவாதி ராஜதுரை வெளியூருக்கு சென்று விட்டார்கள் என்றால் சரிதான். 2வது பிரதிவாதி காமராஜ் இந்தியாவில் தான் இருந்தார். எனது தம்பி மட்டும் தான் வெளிநாட்டிற்கு சென்றார். 2வது பிரதிவாதி காமராஜிடம் அண்ணாமலை படையாட்சியின் நகைகள் இருந்ததாக கற்பனையாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நகைகள் பற்றிய விவரம் காமராஜ்க்கு தெரியாது என்றால் சரியல்ல. தாவா அட்டவணை E and F சொத்துக்கள் குறித்து காமராஜ்க்கு தெரியாது என்றால் சரியல்ல. 6வது பிரதிவாதி ராஜதுரையிடம் அசல் உயில் இருந்தது. அதை நான் தற்போது தாக்கல் செய்துள்ளேன். பிவாதசாஆ 3 உயில் சாட்சிகளில் A.K. ராஜேந்திரன் என்பவர் உயிருடன் உள்ளார். ராமச்சந்திரன் பற்றி தெரியவில்லை. உயில் சாட்சிகளை எங்கள் தரப்பில் விசாரிப்பேன்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை:-**

பிவாதசாஆ.3 உயில் இதுவரை எந்த அதிகாரிகள் முன்பும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தற்போது தான் அதாவது 2026-ல் முதன் முறையாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தம்பி வெளிநாட்டிற்கு செல்லும் போது என் தாத்தாவின் பீரோவில் இருந்து மேற்படி உயிலை பஞ்சாயத்தார்கள் நீதிவிடங்கன், ராஜா, ராஜு, மதியழகன்,

ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் எடுத்தார். நீதிவிடங்கன் என் தம்பியிடம் அந்த உயிலை கொடுத்தார். நான் என் தம்பியுடன் இணைந்து பதில்வாதுரை தாக்கல் செய்துள்ளேன். நான் பதில்வாதுரையில் அசல் உயில் என்னிடம் இருப்பதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னிடம் அசல் உயில் உள்ளது என்பது பிரதிவாதிகள் 1 முதல் 3 தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் 1 முதல் 3 என்னிடம் அசல் உயில் கேட்டார்களா என்றால் கேட்கவில்லை. பிரதிவாதிகள் 1 முதல் 3 தரப்பில் சாட்சி விசாரணை செய்த சமயம் பிவாதசாஆ. 3 உயில் காண்பிக்கப்பட்டதா என்றால் காண்பிக்கப்படவில்லை. பிவாதசாஆ.3 உயில் முன்னிலைக்கு வாதிகளுக்கும் 2வது பிரதிவாதி காமராஜ் மற்றும் 6வது பிரதிவாதி ராஜதுரை சொத்து வழங்கப்பட்டுள்ளது. 2வது பிரதிவாதி காமராஜ் உயில் முன்னிலைக்கு ஆவணங்கள் மாற்றிகொண்டாரா என்று எனக்கு தெரியவில்லை ஆனால் எனது தம்பி 6வது பிரதிவாதி ராஜதுரை ஆவணங்களை மாற்றிக்கொண்டார். பட்டா நகல் பிவாதசாஆ.5 நான் தாக்கல் செய்துள்ளேன். பட்டா மாற்றம் செய்ய கொடுக்கப்பட்ட மனு மற்றும் அதன்மீது வழங்கப்பட்ட உத்தரவு உள்ளதா என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. உயிலில் உள்ள சாட்சி ராமச்சந்திரன் யார் என்று தெரியவில்லை. மற்றொரு சாட்சியான A.K.ராஜேந்திரன் என் தாத்தாவுடன் எப்போதும் இருப்பார். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் 1 முதல் 3 க்கு உயில் பற்றிய விவரம் அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டதா என்றால் உயில் எடுக்கப்பட்ட விவரம்

அவர்களுக்கு தெரியும். எங்களது பதில்வாதுரையில் உயில் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் எடுக்கப்பட்ட விவரம் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 2021ல் தாக்கல் செய்யப்பட்ட எங்களது பதில்வாதுரையுடன் ஏன் அசல் உயில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் குறிப்பிட்டு காரணம் எதுவும் கிடையாது., பிரதிவாதிகள் 1 முதல் 3 தாக்கல் செய்யும் படி கேட்டதால் தாக்கல் செய்தோம். பிவாதசாஆ.3 உயிலில் சர்வே எண் தவறாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிவாதசாஆ.3 உயில் உண்மையான உயில் கிடையாது என்றாலும் அது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பஞ்சாயத்து நடந்ததாகவும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் உயில் எடுக்கப்பட்டதாகவும் அந்த விவரம் வாதிகளுக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிவாதசாஆ.3 உயில் முன்னிலைக்கு வாதிகளிடம் சொத்து எதுவும் அனுபவித்தில் இல்லை என்றால் சரியல்ல. பூர்வீக சொத்து சம்பந்தப்பட்டு எழுதப்பட்டுள்ள உயில் செல்லாது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு சொத்து கொடுக்கக்கூடாது என்ற கேட்ட எண்ணத்தில் தவறான ஆவணங்கள் தயார் செய்து பொய் வழக்காடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness.*
*Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*